## ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ படப்பிடிப்பு! ... முதல் பக்கத் தொடர்ச்சி

வீட்டிற்கு அனுப்பிய பின்னரும், மீண்டும் அழைத்து அதிகாலை 2 மணி வரை கேள்விகள் கேட்கப் பட்டன. அவரது கைப்பேசி பறிமு தல் செய்யப்பட்டது. காலை 11 மணிக்கு மீண்டும் வருமாறு கூறி, அவர் வந்தபின் மாலை 7 மணி வரை காத்திருக்கச் செய்த னர்.

அதேபோல், எந்த ஆதாரமும் இல்லாமல், அவர் ‘மேகாலயா திட் டம்’ எனக் குறிப்பிடப்பட்ட விவகா ரத்தில் தொடர்புடையவர் என்ற வகையில் கையொப்பமிடப்படாத ஒரு காவல்துறை அறிக்கை வெளி யிடப்பட்டது. அவர் திருநாவுக்கரசு வுடன் சில “ஆட்சேபனைக்குரிய” செய்திகளைப் பரிமாறியதாக அதில் கூறப்பட்டது. ஆனால், எதன் அடிப்படையில் அவை ஆட்சேபனைக்குரியவை?

பத்திரிகையாளர்கள் தங்கள் பணியின் ஒரு பகுதியாக காவல் துறை அதிகாரிகள், அரசியல்வாதி கள், அதிகாரிகள், சமூக ஆர்வலர் கள், தகவல் பரிமாறிக் கொள்வார்கள், சில சமயங்களில் குற்றச்சாட்டுக்குட்பட்டவர்களுட னும் தொடர்பில் இருப்பது இயல் பானது. தகவல் பரிமாற்றம் நடந் தது மட்டுமே குற்றத்திற்கான சான்றாகாது.

ஒரு பத்திரிகையாளர் குற்றமற்றவரா அல்லது குற்றவாளியா என்பதை தீர்மானிப்பது விசாரணையின் கடமை. ஆனால் அந்த விசா ரணை நியாயமாகவும் மரியாதை யுடனும் நடைபெற வேண்டும். காவல்துறை பெரும்பாலும் அரசியல் சூழலிலிருந்து தனித்து இயங்குவதில்லை. ஆட்சியாளர் களிடமிருந்து கிடைக்கும் சமிக் ஞைகள் அவர்களின் செயல் பாட்டை பாதிக்கக்கூடும்.

இந்த அரசு ஊடகங்களுடன் நேரடியாக உரையாடுவதை விட சமூக ஊடகங்கள் வழியாக தக வல் பரிமாற்றத்தை விரும்புகிறது. அது அரசின் விருப்பமாக இருக்க லாம். ஆனால், அதே மனப் பான்மை பத்திரிகையாளர்களை நடத்தும் முறையிலும் வெளிப்பட் டால் அது கவலைக்குரியது.

ஜூலை10 அன்று முதலமைச்சர் கரூருக்கு சென்றபோது, செய்தியா ளர்களுக்கு அனுமதி சீட்டுகள் வழங்கப்பட்டிருந்தும், நுழைவா யிலில் காவல்துறையினர் அவர் களைத் தடுத்தனர். மூன்று நாட் களுக்குப் பிறகு, பெரம்பலூரில் முதலமைச்சரின் முதல் தொகுதி பயணத்தின் போது, செய்தியாளர் கள் மேடையிலிருந்து மிகவும் தொலைவில் அமர வைக்கப்பட்ட தால், முதலமைச்சரை சரியாகப் பார்க்கக்கூட முடியவில்லை.

இப்போது, எந்த வழக்கிலும் குற் றப்பத்திரிகையில் பெயர் இல்லாத ஒரு செய்தியாளரின் கைப்பேசியே விசாரணை என்ற பெயரில் பறி முதல் செய்யப்பட்டுள்ளது. ஊடகச் சுதந்திரம் நிலவுகிறது என்ற நல்ல பெயரைப் பெற்றிருந்த தமிழ்நாட் டிற்கு, இத்தகைய காவல்துறை நடவடிக்கைகள் நல்ல அறிகுறி யாக இல்லை.

முதல்வராக பதவியேற்ற பிறகு, விஜய் “இந்த அரசின் ஒரே அதி கார மையம் நான்தான்” என்று கூறியிருந்தார். அது உண்மை யானால், பத்திரிகையாளர் களையோ, அல்லது எந்த குடிமக னையோ விசாரிக்கும் போது காவல்துறை சட்டப்படி, மரியாதை யுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர் உறுதி செய்ய வேண்டும்.

ஒரு அரசு, பிரதான ஊடகப் பத்தி ரிகைத்துறை தேவையற்றது என்று நினைத்தால், முதலில் பத்தி ரிகையாளர்கள் தாங்களே தங் களை தேவையற்றவர்களாக மாற்றிக் கொண்டார்களா என்று சிந்திக்க வேண்டும். தெருக்களில் இறங்கி, மக்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் கதைகளைத் தேடி, சமூகத்தின் கண்ணாடியாகச் செயல்பட வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு.

அதே நேரத்தில், காவல்துறை யினர் தேவையற்ற அளவில் அதி காரத்திற்கு விசுவாசமாக நடக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் அளவுக்கு மீறி ‘முனைப் புடன்’ செயல்படும் போதெல்லாம், அதன் விளைவுகளை முதலில் எதிர்கொள்வது பத்திரிகையாளர் கள்தான். இது புதிய அனுபவம் அல்ல; பல ஆண்டுகளாக ஊடக வியலாளர்கள் இதுபோன்ற சூழல் களை எதிர்கொண்டுள்ளனர்.

தங்கள் செய்திகளுக்குத் தகுதி யான பத்திரிகையாளர்களுக்கு எந்தச் சலுகையும் தேவை யில்லை; அச்சமும் தேவை யில்லை.

இவ்வாறு டைம்ஸ் ஆப் இந்தி யாவில் அதன் ஆசிரியர் அருண் ராம் எழுதியுள்ளார்.

# விளாத்திகுளம் எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் கைது!

## த.வெ.க. அரசின் செயலுக்கு – கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, ஜூலை 21-

விளாத்திகுளம் எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் அவர்களை அராஜகமான முறையில் கைது செய்திருக்கும் த.வெ.க. அரசின் செயலை கண்டித்து கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண் டேயன் அவர்களை அராஜகமான முறை யில் கைது செய்திருக் கும் த.வெ.க. அரசின் செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.



விமர்சனங்களை எதிர்கொள்ள முடியாமல் தொடர்ந்து தி.மு.க.வினர் மீது காவல்துறையை ஏவி அடக்கிப் பார்க்கும் த.வெ.க. அரசுக்கு ஜனநாயக வழியில் தக்க பாடம் புகட்டப்படும்.

உடனடியாக, மார்க்கண்டேயன் அவர்களை விடு தலை செய்ய வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கரு ணாநிதி எம்.பி. தெரிவித் துள்ளார்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட

# அ.தி.மு.க. இளைஞரணியினர் 100க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்!

## மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் முன்னிலையில்!

திருவள்ளூர், ஜூலை 21

திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் தி.மு.க. வின் மக்கள் செல்வாக் கும், இளைஞர்களின் ஆதரவும் தொடர்ந்து அதிகரித்து வருவதை வெளிப்படுத்தும் வகை யில், திருமழிசையில் நடைபெற்ற நிகழ்ச்சி யில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த 100க்கும் மேற் பட்ட இளைஞர்கள் அக்கட்சியிலிருந்து விலகி திராவிட முன் னேற்றக் கழகத்தில் இணைந்தனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலா ளரும், முன்னாள் அமைச்சருமான சா.மு. நாசர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச் சிக்கு திருமழிசை பேரூர் கழக செயலாளர் தி.வே. முனுசாமி ஏற்பாடு செய்திருந்தார். நிகழ்ச்சி யில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அ.தி.மு.க. இளைஞரணி துணைச் செயலாளர் ர. கோகுல கிருஷ்ணன் தலைமை யில், திருமழிசை நகர இளைஞரணி செயலா ளர் பார்த்திபன் உள் ளிட்ட 100க்கும் மேற் பட்ட இளைஞர்கள் தங்களது ஆதரவாளர்க ளுடன் அ.தி.மு.க. விலி ருந்து விலகி தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். புதிதாக கழகத்தில் இணைந்த அனைவருக்கும் முன் னாள் அமைச்சர் சா.மு. நாசர் சால்வை அணி வித்து வரவேற்பு அளித் தார். தொடர்ந்து கழகத் தின் சமூகநீதிக் கொள்கை கள், தமிழ் நாட்டு மக்களுக்காக தி.மு.க. அரசு செயல்ப டுத்தி வரும் மக்கள் நலத் திட்டங்கள், இளைஞர் களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகள் மற்றும் கழக வளர்ச்சிப் பணி கள் குறித்து விளக்க மளித்து, புதிய உறுப்பி னர்கள் கழகப் பணிக ளில் முழு ஈடுபாட்டு டன் செயல்பட வேண்டும் என்று கேட் டுக் கொண்டார்.

இந்த இணைப்பு நிகழ்வில் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய செயலா ளர் ப.ச.கமலேஷ், பொதுக்குழு உறுப்பி னர் ஜெ. மகாதேவன் உள்பட திமுக நிர்வாகி கள் கலந்து கொண்டார் கள்.

# ஓடுகாலிகள் புதிய ‘சோஃபா’க்களில் படுத்து நிம்மதியாக உறங்குங்கள்!

சமீபத்தில் ஒரு தொலைக்காட்சி வெளியிட்ட ‘நியூஸ் கார்ட்’ முக்கியமான ஒரு நிகழ்வை உலகிற்குச் சொன்னது. “சென்னை தலைமைச் செயலகத்தில் நடந்த அமைச்சரவைக்கூட்டத்தில் பங் கேற்க முதலமைச்சர் விஜய் ‘என்ட்ரி’ ஆனதும் எழுந்து நின்று அவருக்கு வணக்கம் தெரிவித்த அமைச்சர்கள். பதி லுக்கு வணக்கம் தெரிவித்த cm விஜய்”

எப்பேர்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க சம்பவம். இதற்கு முன் உலகத்தில் இது போல நடந்ததே இல்லை. அவர்கள் இதோடு நிற்கவில்லை. முதலமைச்சர் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு ஆய் வுக்கு போனால் ‘அவர் உட்கார்ந்தார், எழுந்தார், திரும்பிப் பார்த்தார்’ என சுமார் 20 நியூஸ் கார்டுகள். த.வெ.க.வின் விர்ஷுவல் வாரியர்ஸ் செய்து வந்த பணி களை இன்றைக்கு ஊடகங்கள் எடுத் துக்கொண்டன.

ஆதி திராவிடர் மாணவர் விடுதியை இதற்கு முன் எந்த முதலமைச்சரும் பார் வையிட்டதில்லை என த.வெ.க. அமைச் சரவையிலிருக்கும் ஒரு வி.சி.க. அமைச் சர் உருட்டுகிறார். உடனே முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதுபோல ஆதிதிராவிடர் மாணவர் விடு திகளை பார்வையிட்ட காணொளிகள் வெளியிடப்பட்டு பதிலடி தரப்பட்டது. வதந்தி பரப்புவதில் போட்டியே இப்போது த.வெ.க. விர்ஷுவல் வாரியர்ஸ்க்கும் த.வெ.க. அமைச்சர்களுக்கும்தான்.

**அமைச்சரவைக் கூட்டத்தில் “எந்த அமைச்சர் ஊழல் குற்றச்சாட்டிற்கு ஆளா னாலும் உடனே பதவி நீக்கம் செய்யப்படு வார்கள் என முதலமைச்சர் எச்சரித்ததாக ‘தகவல்’ என ஒரு செய்தி அனைத்து ஊடகங்களிலும் தலைப்புச் செய்தியானது. இப்படி ஒரு தகவலைச் சொன்னது யார்? அந்த செய்தியின் ‘சோர்ஸ்’ என்ன? யாருக்கும் தெரியாது. அரசின் சார்பில் எந்த செய்திக் குறிப்பும் கிடையாது. வெறும் ‘தகவல்’. அதாவது இவர்கள் பரப்பும் வதந்திக்கு வைத்திருக்கும் நாகரீ கமான பெயர் ‘தகவல்’. த.வெ.க.வின் வதந்தி தொழிற்சாலையிலிருந்து வதந்தி கள் தினமும் வண்டி வண்டியாக இறக்கப் படுகின்றன. இந்த அரசின் தோல்விகளை யும் ஊழல்களையும் அராஜகங்களையும் மறைக்க, திசை திருப்ப விஜய் மீதான கதாநாயக போலி பிம்ப வழிபாடும் பொய்த் தகவல்களும் இடையறாது உற்பத்தி செய்யப்படுகின்றன.**

பழனியாண்டவர் கோயில் 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை 2 கோடி ரூபாய்க்கு விற்க முயன்ற மாபெரும் ஊழல் விவகாரத்தில் வசமாக சிக்கிக்கொண்ட த.வெ.க. அரசு அதை ஊடக கவனத்திலிருந்து திசை திருப்ப பல் வேறு உருட்டுகளில் ஈடுபட்டிருக்கிறது. கோயில் நிலத்தை யாரும் விற்க முடி யாது என பத்திரப் பதிவுத்துறையின் கடை நிலை ஊழியர்களுக்குக்கூட நன்கு தெரியும். மாபெரும் மோசடியின் இந்தக் கூட்டு சதியின் பழியை சார்பதிவா ளர் மேல் போட்டுவிட்டு தப்பி ஓட முயல் கிறார்கள்.

சார் பதிவாளர் நீதி மன்றத்தில் “இது தொடர்பான எண்பது சதவிகித பணிகள் ஏற்கனவே முடித்து வைக்கப்பட்டிருந் தன. கையெழுத்துப் போட்டது மட்டும் தான் எனது வேலை” என நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். தூய சக்தி ஆட்சிக்கு வந்த நாளிலிருந்தே இந்த தீய வேலை தொடங்கிவிட்டது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

இதிலிருந்து கவனத்தை திருப்பவே இத்தனை பித்தலாட்டங்கள். விவாதத்தில் தந்தி டிவி நெறியாளர் ஹரிஹரன் “இது அரசின் கையாலாகாததனம் (inefficiency) இல்லையா?” எனக் கேட் டால் உடனே அவரை ‘அந்த வார்த் தையை வாபஸ் வாங்குங்கள்’ என மிரட்டுகிறார் த.வெ.க. பேச்சாளர்.

இன்னொரு புறம் தி.மு.க. மீதான போலி குதிரைபேர குற்றச்சாட்டில் புதிய தலைமுறை நெறியாளர் விஜயன் இணைக்கப்பட்டு காவல்துறையால் உளவியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப் படுகிறார். ஒரு பொய்க்குற்றசாட்டை நிரூ பிக்க முடியாமல் யார் மேலேயோ நடவ டிக்கை எடுப்பது போல காவல்துறை ‘பாவ்லா’ காட்டி இந்தச் செய்தியை உயிரோடு வைத்திருக்க முயற்சிக்கிறது. மேலும் இவர்கள் செயல்பாடுகளை விமர்சன ரீதியாக அணுகும் அல்லது



**மனுஷ்ய புத்திரன்,**

மாநில ஆலோசகர்,

தி.மு.க தகவல் தொழில் நுட்ப அணி

இவர்களை கேள்வி கேட்கும் ஊடகவிய லாளர்களை அச்சுறுத்தலுக்கு ஆளாக்க வேண்டும் என்பதுதான் அவர்கள் நோக் கம். இதில் பா.ஜ.க.வையும் இவர்கள் விஞ்சி விட்டார்கள்.

த.வெ.க. அரசின் கையாலாகாத தனங்கள் ஒன்றா இரண்டா? சட்டம் ஒழுங்கு சீர் குலைவும் சொந்த அமைச் சர்களைகூட கட்டுப்படுத்த முடியாத தலைமை, மாநிலத்திற்கு பெரும் நிதிச்சு மையை ஏற்படுத்தும் ‘விபி ஜி ராம் ஜி’ திட்டத்திற்கு ஒன்றிய அரசிடம் ஒப்புதல் அளித்தது, வந்தே மாதரம் விவகாரத்தில் ஆளுநருக்கு அடிபணிந்ததுடன் ஆளுநர் போட்டி அரசாங்கம் நடத்த அனுமதிப்பது, விவசாயிகள் கடன் தள்ளுபடியில் செய்த ஏமாற்று வேலை, தேர்தல் அறிக்கையில் கொடுத்த எந்த வாக்குறுதியையும் இன்னும் நிறைவேற்ற முயற்சிக்காதது, காவிரி நீர் பங்கீடு, மேகதாட்டு அணை விவகாரங்களில் எந்த அழுத்தத்தையும் தராதது, இஸ்லாமியர்களுக்கான உள் இட ஒதுக்கீடு குறித்து முதலமைச்சரின் மௌனம் என கையாலாகாத தனத்திற்கு உதாரணங்கள் ஒன்றா இரண்டா?

### தி.மு.க.விற்கு ஆலோசனை கூறும் திடீர் ஆலோசகர்கள்!

விஜய்க்கு நாலெல்லாம் வெண்சாம ரம் வீசுவது ஒரு புறம் என்றால் தி.மு.க.விற்கு எதிரான பொய்களைப் பரப்புவதில் த.வெ.க. கூட்டணி கட்சி களும் ஊடகங்களும் மும்முரமாக ஈடு பட்டிருக்கின்றன. ஒரு தேர்தல் தோல்வி வந்ததும் பதவிக்கும் பரிசுக்கும் ஆசைப் பட்டு ஓடிபோன ஓடுகாலிகள் எந்தக் கூச் சமும் இல்லாமல் தி.மு.க இந்தியா கூட்ட ணியில் நீடிக்க வேண்டும் என்றும் முக்கிய பிரச்சினையில் என்ன நிலைப் பாடு எடுக்கவேண்டும் என்றும் ஆலோ சனை கூறி வருகின்றனர். இவர்களிடம் ஆலோசனை கேட்கவேண்டிய இடத்தில் தி.மு.கவும் இல்லை, தி.மு.க.விற்கு ஆலோசனை வழங்கும் தகுதி இவர் களுக்கும் இல்லை.

மாநில உரிமை சார்ந்து எந்தப் பிரச்சி னைகளுக்காக தி.மு.க. இடையறாது போராடி வந்திருக்கிறதோ அவற்றை ஒரு போதும் விட்டுக் கொடுக்காது என்பதை தி.மு.க தலைவர் அழுத்தம் திருத்தமாக கூறியிருக்கிறார். காங்கிரஸின் சந்தர்ப்ப வாத துரோக நிலைப்பாடுகளை எதிர்த்தே தி.மு.க. இந்தியா கூட்டணியிலிருந்து வெளியேறியது. ஆனால் இந்தியா கூட்ட ணிக் கட்சிகள் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து உச்சநீதிமன்ற நீதிபதிக்கு எழுதிய கடிதத்தில் கையெழுத் திட தி.மு.க. தயங்கவில்லை. பாராளு மன்ற கூட்டத் தொடர் தொடர்பான அலு வல் கூட்டத்தில் திரிணாமுல் காங்கிரஸிலிருந்து வெளியேறிய அதிருப்தி எம்.பி.க்களை பங்கேற்க அனுமதித்ததை எதிர்த்து பிற இந்தியா கூட்டணி கட்சிகளோடு இணைந்து வெளியேறவும் தி.மு.க. தயங்கவில்லை.

தி.மு.க. எதை ஆதரிக்கவேண்டும் எதை எதிர்க்கவேண்டும் என்பது கொள்கை சார்ந்த பிரச்சினைகளுக்காக எத்தனையோ தியாகங்களைச் செய்த தி.மு.க.விற்கு தெரியும். ஓடுகாலிகள் அதைப்பற்றி கவலைப்படவேண்டிய தில்லை.

ஆனால் தி.மு.க. பா.ஜ.க.வோடு கூட் டணி வைக்கப்போகிறது என்ற வதந் தியை ஊடகங்களோடு சேர்ந்து த.வெ.க கூட்டணிக் கட்சிகள் பரப்பி வருகின்றன. இதை யார் சொல்கிறார்கள் என்றால் நேற்றுவரை தி.மு.க. கூட்டணியிலிருந்து விஜய்யை எதிர்த்துவிட்டு பா.ஜ.க.வின் கொள்கைகளை அனைத்தையும் சிர மேற்கொண்டு செயல்படுத்து வரும் த.வெ.க.வோடு சேர்ந்து ஆட்சியமைத் துக்கொண்டிருக்கும் சந்தர்ப்பவாத தலைவர்கள்.

தொகுதி மறுவரையறை மசோ தாவை பா.ஜ.க. மீண்டும் கொண்டுவரு கிறது. தி.மு.க. அது நிறைவேற உதவும் என்ற பொய்யை மீண்டும் மீண்டும் சொல்லி வருகிறார்கள். தி.மு.க. அளித் துள்ள திருத்தங்களை ஒன்றிய அரசு ஏற் றால் மட்டுமே அதன் அடிப்படையில் முடி வெடுக்கப்படும் என்று ஏற்கனவே தி.மு.க. தரப்பில் தெளிவாக கூறப்பட்டும் இந்தப் பொய் திரும்பத் திரும்ப சொல்லப் படுகிறது. இத்தனைக்கும் தொகுதி மறுவ ரையறை மசோதா நடப்பு பாராளுமன் றக் கூட்டத்தொடரில் பட்டியலிடப்படக் கூட இல்லை.

அப்படியெனில் இந்த கருத்தியல் உரு வாக்கம் எங்கிருந்து வருகிறது? தி.மு.க.மேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி பலவீனப்படுத்தவேண்டும் என்ற தொடர் சதித்திட்டத்தின் ஒரு பகுதிதான் இது.

**கட்சியின் நலனுக்காகவும் தமிழ்நாட் டின் நலனுக்காகவும் எந்த முடிவையும் எடுக்கும் அரசியல் பார்வையும் கொள் கைத் தெளிவும் தி.மு.க.வுக்கு உண்டு. ஓடு காலிகள் புதிய ‘சோஃபா’க்களில் படுத்து நிம்மதியாக உறங்குங்கள்.**